திரு. மே. அ. இராசகுமார் :—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் உள்ள துவரங்குரிச்சியில் பல்வேறு அரசாங்க அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த நிலையைப் போக்கி விரைவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்களிலேயே அலுவலகங்கள் நடைபெறும் வகையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிருந்து கோரிக்கை வந்தால் அரசு அதனைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் வேண்டுகோள் பேரில் அவரது வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படும்.

தாந்தோணி மலைக்கு அருகில் மார்கெட்டிங் கமிட்டிக்கான நில ஆர்ஜிதம்.

*வினா எண் 674—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம் கரூர் தாலூக்கா தாந்தோணி மலைக்கு அருகில் மார்க்கெட்டிங் கமிட்டிக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை ஏக்கர் எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) 8.25 ஏக்கர்.

போச்சாம் பள்ளியிலுள்ள சனோலா எண்ணெய் தொழிற்சாலை.

* வினா எண் 675—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தருமபுரி மாவட்டம் போச்சம்பள்ளியில் தமிழ்நாடு வேளாண் தொழிற்கழகத்தின் மூலம் செயல்பட்டு வரும் சனோலா ஆயில் தொழிற்சாலை மாதத்தில் எவ்வளவு நாட்கள் இயங்கி வருகிறது ?

1981 ஏப்ரல் 7]

(ஆ) இத் தொழிற்சாலையை லாபகரமாக நடத்துவதற்கு அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன ?

(இ) அவைகளின் பலன் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) போச்சம்பள்ளியில் உள்ள சனோலா எண்ணெய்த் தொழிற்சாலை மாதத்தில் சராசரி நான்கு அல்லது ஐந்து நாட்கள் இயங்கி வருகிறது.

(ஆ) இத்தொழிற்சாலை லாபகரமாக நடக்க கீழ்க்கண்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(1) அதிக அளவு சூரியகாந்தி விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு இத்தொழிற்சாலையின் பிழிந்தெடுக்கும் திறனை முழுமையாகப் பயன்படுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(2) கடலெண்ணெய் சுத்திகரிக்கப்படும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(3) சூரிய காந்தி விதைகள் மட்டுமன்றி பருத்தி விதைகளைப் பயன்படுத்த இந்திய பருத்தி கழகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. நிலக் கடலை விதையிலிருந்து கடலெண்ணெய் எடுக்கவும் மத்திய அரசின் அனுமதி பெற ஆவன செய்யப்பட்டு வருகிறது.

(இ) அதிக அளவு சனோலா எண்ணெய் தயாரிப்பதன் மூலமும் கடலெண்ணெய் சுத்திகரிப்பதன் மூலமும் இத்தொழிற்சாலை லாபத்தில் இயங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு 1981—82-ம் ஆண்டில் ரூ. 43,000 லாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் இருக்கும் இந்த சனோலா ஆயில் தொழிற்சாலை மாதத்தில் 5 நாட்கள் தான் நடைபெறுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது மாதம் முழுமைக்கும் இயங்குவதற்கு ஏற்ப போதுமான சூரிய காந்தியைப் பயிரிடும் வேலை தமிழ்நாட்டில் மேற்கொள்ளப் பெறவில்லை என்று தெரிகிறது. அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா, அத்தோடு மற்ற கடலை எண்ணெய் போன்ற எண்ணெய்களையும் எடுப்பதற்கு மத்திய அரசின் அனுமதி தமிழ் நாட்டிற்குக் கிடைத்து விட்டதா ? இல்லையென்றால் விரைவில் அது கிடைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த ஆலை, 4, 5 நாட்களுக்கு மட்டுமே இயங்குவதற்கு காரணம் தொழிற்சாலைக்குத் தேவையான சூரிய காந்தி விதைகள் கிடைக்காததுதான். அது போதிய அளவிற்குக் கிடைக்காததற்கு என்ன

காரணம் என்றால், கொள்முதல் விலை 1980-ல் கிலோவிற்கு ரூ. 3.60 பைசா என்று இருந்ததை, ரூ. 4.20 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருப்பதேயாகும். 1981-82-ல் 1,200 மெட்ரிக் டன் விதைகளைக் கொள்முதல் செய்யலாம் என்றும் உத்தேசிக்கப் பட்டுள்ளது. அதைப்போல கடலை எண்ணெய் எடுப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறோம். கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் புஞ்சைப் பயிர்கள் பயிரிடக்கூடிய நிலங்கள் இருக்கின்றனவே, அந்த நிலங்களில் சூரியகாந்தி விதைகளைப் பயிரிட உழவர்களுக்கு ஊக்கமளிக்கும் முறையில் உதவிகளை அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றியெல்லாம் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய காந்தி விதையின் விலை ரூ. 3.60 என்று குறைவாக இருப்பதினால், அதை ரூ. 4.50-க்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்டு வருவதினால்தான், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அந்த சனோலா ஆயில் தொழிற்சாலை இயங்க முடியாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்கள் கேட்பது போல் உயர்த்திக் கொடுக்கக் கூடிய உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஏற்கனவே நான் என் பதிலில் குறிப்பிட்டிருக்கிறேன். ரூ. 3.60 என்பதை ரூ. 4.20 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று.

திரு. சோ. அழகர்சாமி : மற்ற எல்லா எண்ணெய்களைவிட இந்த சூர்யகாந்தி எண்ணெய் உடலுக்கு மிகவும் நல்லது, அதைச் சாப்பிடுவதன் மூலம் பல நோய்கள் தீருகின்றன என்று சொல்லப் படுகிறது. ஏற்கனவே இந்த எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகளுக்கு போதுமான சூரியகாந்தி விதைகள் கிடைக்கவில்லை என்பதுதான் இப்போதைய நிலை. கட்டுபடியாகக் கூடிய விலை கிடைக்கவில்லை என்பதற்காக பலயிடங்களில் சென்ற ஆண்டு சூரியகாந்தி சாகுபடி செய்தவர்கள் கூட அதை நிறுத்தி யிருக்கிறார்கள். ரூ. 4.20 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக் கிறது என்று சொன்னார்கள். எனவே கூடுதல் விலை நிர்ணயம் செய்து எந்த எந்த இடங்களில் இந்த விதைகள் உற்பத்தியா

கின்றனவோ அவற்றை அரசாங்கமே நேரடியாக வாங்கி அந்த ஆலைகள் முழுமையாக இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரூ. 4.20 என்பது இப்போதுள்ள நிதிநிலைமைக்கு ஏற்ப உயர்த்திக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருப்பது. அதை மேலும் உயர்த்துவதற்கு வாய்ப்புகள் பின்னால் வருமானால் அதை அரசு பரிசீலிக்கும்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமை அலுவலகத்தை மதுரைக்கு மாற்றுதல்.

*வினா எண். 676—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமை அலுவலகத்தை 1–4–1981 முதல் மதுரைக்கு மாற்றுமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மாற்றுவதற்கான காரணம் என்ன ?

(இ) பலன் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) வேளாண்மைப் பொறியியல் துறையின் வேலைகள் பரவிக்கிடக்கும் முக்கிய மாவட்டங்களைக் கருத்திற்கொண்டு மதுரையை இத்துறையின் தலைமையிடமாக அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இதன் தலைமை அலுவலகத்தை அமைக்க தகுந்த கட்டிடம் மதுரையில் தற்போது கிடைக்க வில்லை என்ற காரணத்தாலும் தகுந்த கட்டிடம் கிடைத்து சில மாதங்களுக்குப் பின் மாற்றம் செய்தால், இம்மாற்றம் கல்வி ஆண்டின் இடைக்காலத்தில் ஏற்படுமாதலால் இவ்வலுவலத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களின் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படும் என்ற காரணத்தாலும் வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமையிடத்தைச் சென்னையிலிருந்து மதுரைக்கு மாற்றப்படுவதை இன்னும் ஓராண்டுக்குப் பின் ஆராயலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(இ) இத்துறையின் தலைமைப் பொறியாளர் குறைந்த கால அளவில், ஏனைய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் இத்துறையின் வேலைகளை நேரில் சென்று கண்காணித்து, வேளாண்மைப் பொறியியல் சாதனங்களின் புதிய கண்டு பிடிப்புகளையும், மண் வளப் பாதுகாப்பு முறைகளையும் முனைந்து செயல்படுத்தி வேளாண்மை வளத்தை இன்னும் சிறந்த முறையில் பெருக்க இது வழி வகுக்கும்.